# மன்னாரில் ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்வு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள அடம்பன் மற்றும் பல பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் மன்னார் மாவட்டத்தில் மடு, மன்னார்தீவு

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-50

ஈழநாடு

THE EELANADU
'NATIONAL' TAMIL DAILY'

மலர் 38 வைகாசி 22 துல்ஹஜ்ஜா 21 இதழ் 114

யாழ்ப்பாணம் புதன்கிழமை 5-06-1991

## இளநீர் பறிக்கச் சென்ற இரு இராணுவம் பலி

[வவுனியா]

வவுனியா கூழாம் குளம் பகுதியில் இராணுவ முகாமிற்கு அண்மையிலுள்ள காவலரணிற்கு அருகே தென்னை மரத்தில் இளநீர் பறிக்கச் சென்ற இராணுவத்தினர்

[4ம் பக்கம் பார்க்க]

## நயினை உற்சவத்தில் கலந்துகொள்ள தடை

[வேலணை]

இம்மாதம் 12-ம் திகதி ஆரம்பமாகவுள்ள நயினாதீவு நாகபூஷணி அம்மன் வருடாந்த உற்சவத்தில் கலந்து கொள்வதற்கு வெளியூரிலுள்ள அடியார்களுக்கு கடற்படை

(4ம் பக்கம் பார்க்க)

# தமிழர் பகுதிகளில் மீண்டும் ராணுவ நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

**மட்டக்களப்பு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் மீண்டும் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.**

வெசாக் பண்டிகையின் போது நிறுத்தப்பட்டிருந்த இராணுவ தாக்குதல்கள் மீண்டும் தீவிரமடைந்து வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடைக்கிடையே இடம்பெற்றுவரும் புலிகள்-இராணுவம் மோதலையடுத்து நேற்று அப்பகுதியில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டது.

இந்த ஊரடங்குச் சட்டத்தின்போது பெரும் தேடுதல் வேட்டை நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னாரில் நேற்று முன்

(4ம் பக்கம் பார்க்க)

## பெண் புலிகள் மீது சிறையில் விசாரணை

(சென்னை)

தமிழகத்தில் அண்மைக் காலங்களில் கைதுசெய்யப்பட்டு, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஐந்து பெண் போராளிகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனராம்.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் மோதல்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்திற்குமிடையில் பலத்த மோதல் இடம் பெற்றது.

(4-ம் பக்கம் பார்க்க)

## முத்தமிழ் விழா நாளை மானிப்பாயில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்]

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் முத்தமிழ்விழா நாளை வியாழக்கிழமை மானிப்பாயில் ஆரம்பமாகவுள்ளது.

நாளை 6ம் திகதி முதல் 8ம் திகதிவரையும் மானிப்பாயிலும், 9ம், 10ம் திகதிகளில் சாவகச்சேரியிலும், 11ம், 12ம் திகதிகளில் நெல்லியடியிலும், 13ம், 15ம் திகதிகளில் யாழ். நகரிலும் முத்தமிழ் விழா நடைபெறவுள்ளது.

முத்தமிழ் விழா நடக்கும் இடங்கள் தோறும் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டு, சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்படுள்ளன.

## மூதூரில் கடும் மோதல்

(மூதூர்)

மூதூர்ப் பகுதிக் கடலில் விசைப் படகில் சென்று கொண்டிருந்த விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையே நேற்று முன்தினம் கடும் மோதல் இடம்பெற்றது.

இம்மோதலின்போது இருவர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கோபால்சாமி பிரபா சந்தித்தது பற்றி விசாரணை நடத்தவேண்டும்

(சென்னை)

விடுதலைப்புலிகள் தலைவர் திரு. பிரபாகரனை திரு. வை. கோபாலசாமி வன்னிக்காட்டில் வைத்து சந்தித்தது குறித்து விசாரணை நடாத்த வேண்டுமென தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி கோரியுள்ளார்.

1989ம் ஆண்டில் திரு. கோபாலசாமி சட்டவிரோத

(4ம் பக்கம் பார்க்க)

## கலைஞர் கருணாநிதியின் வாகனம் தீக்கிரை

(சென்னை)

தமிழக முன்னாள் முதலமைச்சரும் தி. மு. க. தலைவருமான திரு. மு. கருணாநிதியின் தேர்தல் பிரசார வான் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

சென்னையில் தி. மு. க. அலுவலகத்திற்கு முன்னால் நிறுத்தப்பட்டிருந்த இந்த வான் விஷமிகளால் தீயிட்டு முற்றாக கொளுத்தப்பட்டுள்ளது.

பிரசாரத்திற்கு கலைஞர் பயன்படுத்தும் இவ்வான் குளிரூட்டப்பட்ட வசதிகளையும்

(4ம் பக்கம் பார்க்க)

## மிதிவெடியில் இருவர் காயம்

[யாழ்ப்பாணம்)

மிதிவெடிகளில் அகப்பட்டு காயமடைந்த இருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொண்டமானாறு வளலாய்ப்பகுதியில் உள்ள கடற்கரை யோரத்தில் நடந்து சென்று கொண்டிருக்கையில

[4ம் பக்கம் பார்க்க]

## ராமராவ் உண்ணாவிரதம் கட்டாயமாக நிறுத்தப்பட்டது

(ஹைதராபாத்)

தேசிய முன்னணித் தலைவர் என் ரி. ராமராவ் மேற்கொண்ட 6 நாள் மௌன உண்ணாவிரதம் நேற்றுக் கட்டாயமாகமுடிவுக்குக்கொண்டு வரப்பட்டது.

அவரது உயிரைக் காப்பாற்ற நீதிபதியின் உத்தரவுக்கிணங்க அவருக்கு நேற்றுக் காலை நிசாம் மருத்துவ மனையில் டாக்டர்களினால் குளுக்கோஸ் செலுத்தப்பட்டது.

திரு. ராமராவ் பின்னர் செய்தியாளரிடம் பேசும் போது தமது உண்ணாவிரதம்

[4ம் பக்கம் பார்க்க]

## பலன்எதுவுமின்றி திரும்பிய புலனாய்வுக் குழுவினர்

(கொழும்பு)

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக தடயங்களைப் பெற்றுக்கொள்ள கொழும்பு வந்த இந்தியப் புலனாய்வுக் குழுவினர் பலன் எதுவுமின்றி

(4ம் பக்கம் பார்க்க]

## முகாமை சுற்றி முள்வேலி அமைக்கும் இராணுவம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை சின்னமடு புனிதமரியாள் பாடசாலையில் முகாம் அமைத்துள்ள இராணுவத்தினர் பாடசாலையைச் சுற்றியும் அதனையடுத்துள்ள வீதியைத்தடை செய்தும் முள்கம்பி போட்டு பாதுகாப்பு அரண்களைப் பலப்படுத்தி வருகின்றனர்.

இதேவேளை இப்பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் புலிகளின் மிதிவெடிகளுக்கு அஞ்சி முகாம்களில் முடங்கி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (59)

## ராஜீவ் கொலையினால் இனப் பிரச்னை தீர்விற்கான வாய்ப்பு குறைந்துவிட்டது

(கொழும்பு]

இலங்கை இனப்பிரச்னையை அமைதி வழியில் தீர்ப்பதற்கான வாய்ப்பு ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதை யடுத்து குறைந்துவிட்டது.

இவ்வாறு ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அவ்வாறாயின் வடக்கு கிழக்கில் இராணுவ நடவடிக்கை தொடருமா என செய்தியாளர்கள் கேட்டதற்கு பதில் கூறவும் அவர் மறுத்துவிட்டார். (சி)

## வரி விளம்பரம்

### பரீட்சை (ஆண்டு-4)

புதிய கல்வி நிலையத்தால் நடத்தப்படும் ஆண்டு - 4 பரீட்சை [இரண்டாவது] 09-06-91 ஞாயிறு மு, ப. 8-00 / பி ப 1-00 நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும். புலமைப் பரிசில் பரீட்சை மாதிரியில் வினுக்கள் இடம்பெறும். ஆண்டு-4 முதல் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் கற்பிக்சப்படுகின்றன. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [சி-4805]

### "முள்முடி மன்னர்கள்"

மீரா வெளியீடு-சமூகநாவல் ஒற்றைக் காகம் விடாமல் கரைந்து கொண்டிருந்தது என்று ஆரம்பித்து '' அடக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுவோம் தமிழ் ஈழத்தாயகத்தின் விடுதலைக்காகப் போராடுவோம் என்பதுவரை விறுவிறுப்பாகவே கதையை எழுதியிருக்கிறார். சிதம்பர திருச்செந்திநாதன். விற்பனையாகின்றது, (சி-4808)

### தவறிவிட்டது

கடந்த 30-ம் திகதி வவுனியா தடைமுகாமிற்கும் சங்குப்பிட்டிக்குமிடையில் மினிவானில் பயணம் செய்யும் போது எனது நீல நிறப் பை ஒன்று தவறிவிட்டது அதற்குள் முக்கியமான சில பொருட்கள் உள்ளன. எனவே அதைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்துவே. இராஜலஷ்மி, கேணியடி, கொக்குவில் மேற்கு கொக்குவில் என்ற விலாசத்தில் ஒப்படைக்குமாறு வேண்டுகிறேன். [சி4812]

### தபால் பைகள்

[பூநகரி]

ஒருமாதமாக பரந்தன்பகுதியில் சேர்ந்த தபால் பைகள் கடந்த மாதம் 30ம் திகதி கப்பல் மூலம் அனுப்புவதற்காக பூநகரியூடாக பலசிரமங்களுக்கு மத்தியில் யாழ்ப்பாணம் எடுத்துச்செல்லப்பட்டது. (23)

## உலக சுற்றுடல் தினம்

(கொழும்பு)

உலக சுற்றுடல் தினம் இன்று 5ம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு பாடசாலைகளின் ஒத்துழைப்புடன் பல்வேறு நிகழ்ச்சிகளை மத்திய சுற்றுடல் அதிகாரசபை ஏற்பாடு செய்துள்ளது.

மிகச் சிறந்த வேலைத்திட்டத்தை மேற்கொள்ளும் பாடசாலைக்கு பரிசு வழங்கப்படும்.

## இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணக் கிளை

### வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவு

## உறுப்பினர் கூட்டம்

மேற்படி கூட்டம் 1991-ம் ஆண்டு யூன் மாதம் 7-ம் திகதி வெள்ளிக்கிழமை பி. பகல் 4.30 மணியளவில் இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க யாழ்ப்பாணக் கிளையில் அமைந்துள்ள பயிற்சிக் கூடத்தில் நடைபெறும். வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள செஞ்சிலுவைச்சங்க அங்கத்தவர் அனைவரையும் இதில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம். புதிய செயற்குழு உறுப்பினர்களுக்கான தெரிவு நடைபெறும்.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
03-06-1991.

(எ 1351)

## இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணக் கிளை

### ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு

## உறுப்பினர் கூட்டம்

மேற்படி கூட்டம் 1991-ம் ஆண்டு ஜூன் மாதம் 7-ம் திகதி வெள்ளிக்கிழமை பி. பகல் 3.30 மணியளவில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையில் அமைந்துள்ள பயிற்சி கூடத்தில் நடைபெறும். ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர் அனைவரையும் இதில் பங்குபற்றுமாறு அழைக்கின்றோம். புதிய உத்தியோகத்தர், புதிய செயற்குழு உறுப்பினருக்கான தெரிவு நடைபெறும்.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்.

73, கண்டி ரோட்,
யாழ்ப்பாணம்.
03-06-1991.

(சி 1352)

## கிராமசேவை அலுவலர் கூட்டம்

[சித்தன்கேணி]

தமிழ்பேசும் கிராமசேவை அலுவலர் சங்கத்தின் பொதுக் கூட்டம் அண்மையில் நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெற்றது.

## இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணக் கிளை

### வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு

## அங்கத்தினர் கூட்டம்

மேற்படி கூட்டம் 1991-ம் ஆண்டு ஆனி மாதம் ஒன்பதாந் திகதி [1991-06-09] ஞாயிற்றுக்கிழமை பகல் 12.30 மணிக்கு மருதன்கேணி இந்து தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் நடைபெறும். வடமராட்சி கிழக்கு-உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இலங்கை செஞ்சிலுவைச்சங்க அங்கத்தவர் அனைவரும் இதில் பங்குபற்றுமாறு அழைக்கின்றோம். இதில் புதிய உத்தியோகத்தர் தெரிவும் நடைபெறும்.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்.

73, கண்டிரோட்,
யாழ்ப்பாணம்,
03-06-1991.

(எ 1353)

## கண்ணீர் அஞ்சலி

### டாக்டர் J. P. C. பிலிப்ஸ் J.P.

யாழ். நகரின் பிரபல வைத்தியரும், சமூக சேவையாளரும் எமது சங்கத்தின் காப்பாளருமான வைத்திய கலாநிதி J. P. C. பிலிப்ஸ் அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**குருநகர்**
**கடற்றொழில் அபிவிருத்தி சங்கம்.**

(ஏ 4811)

# கண்ணீர் அஞ்சலி

## டாக்டர் J. P. C. பிலிப்ஸ் (J. P.)



மலர்வு : 19 - 03 - 1932
உதிர்வு : 31 - 05 - 1991

நீண்டகாலமாக பழைய மாணவர் சங்கத்தின் சிரேஷ்ட உப தலைவரும், பற்றீஷியன் தொழில் பயிற்சி நிறுவனத்தின் தலைவருமாகிய அமரர் டாக்டர் J. P. C. பிலிப்ஸ் (J. P.) அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக்கொள்கிறோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிற்காக புனித பத்திரிசியார் கல்லூரி தேவாலயத்தில் 08-06-91 சனிக்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். பழைய மாணவர்கள், அனுதாபிகள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**புனித பத்திரிசியார் கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்,**
**பற்றீஷியன் தொழிற்பயிற்சி நிறுவனம்**

59, சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(ஏ-1354)

## ★ தமிழின விடுதலைக்காக உயிரை அர்ப்பணித்த தியாகி சிவகுமாரன்

ஈழத் தமிழ் இனத்தின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்த தியாகி சிவகுமாரன் மறைந்து இன்று பதினேழாவது ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. 1974ம் ஆண்டு ஜூன் மாதம் 5ந் திகதி சிவகுமாரன்தனதுஉயிரைத்தியாகம் செய்ததினமாகும்.

சமுதாய சீர்திருத்தமே சிவகுமாரனின் பொதுவாழ்வின்

**தரப்படுத்தலை எதிர்த்து**

**யாழ்நகரில் நடந்த தமிழ்**

**மாணவர் ஊர்வலத்தை**

**முன்னின்று**

**நடத்தியவர்களில்**

**தியாகி சிவகுமாரனும்**

**ஒருவர்.**

தொடக்கமாக இருந்தது. 1970ம் ஆண்டு ஈழத்தமிழ் மாணவர்களின் உயர்கல்வியையே ஒழித்துக் கட்டுவதற்காக புதிய பல்கலைக்கழக அனுமதி சம்பந்தமான தரப்படுத்தல் திட்டம் புகுத்தப்பட்டது.

1970ம் ஆண்டு நவம்பர் 24ந் திகதி தரப்படுத்தல் திட்டத்தை எதிர்த்து தமிழ்மாணவர்கள் வரலாறு காணாத கண்டன ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை யாழ். நகரில் நடத்தினார்கள். இந்த ஊர்வலத்தை முன்னின்று நடத்தியவர்களில் சிவகுமாரனும் ஒருவர்.

1970ம் ஆண்டு டிசம்பர் மாதம் உரும்பிராய்க்குவருகைதந்த சிறிலங்காவின் கலாசார உதவி அமைச்சர் சோமவீர சந்தரசிறிக்கு கைக்குண்டு வீசியதாக சந்தேகத்தின்பேரில் பொலிசார் சிவகுமாரனை கைதுசெய்து விளக்கமறியலில் வைத்தார்கள். இரண்டு மாதங்கள் விளக்கமறியல் சிறைக்குள் இருந்த சிவகுமாரன் மீது வழக்குத்தொடர ஆதாரங்கள் இல்லாத பொலிசார் வேறு வழியின்றி விடுதலை செய்தனர்.

1971ம் ஆண்டுமார்ச்மாதம் யாழ். பிரதான வீதியில் யாழ். மேயர் அல்பிரட் துரையப்பாவின் காருக்கு குண்டுவைத்ததாக சந்தேகத்தின் பேரில் பொலிசார் இவரைக் கைது செய்தனர். 21 மாதங்களாக யாழ்ப்பாணம், அனுராதபுரம், ஆகிய சிறைச்சாலைகளில் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இவர்மீது ஆதாரபூர்வமாக வழக்குத் தாக்கல் செய்ய வழியற்று பொலிசார் இறுதியில் விடுதலை செய்தனர்.

1974-ஆம் ஆண்டு தைத் திங்களில் நான்காவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு யாழ். நகரில் நடைபெற்றது. ஜனவரி 9ம் திகதி ஈழத் தமிழர் வரலாற்று பெருமை பேசும் ஊர்தி ஊர்

**மா. துரைநாயகம்**

வலம் நல்லூர் சட்டநாதர் ஆலய முன்றலிலிருந்து ஆரம்பமாக இருந்தது.

''எப்படை எதிர்த்து வந்தாலும் அஞ்சேன்'' எனக் கர்ச்சித்த வன்னி மாவீரன் பண்டார வன்னியன் என்னும் வாசகம் ஊர்தி ஒன்றில் பொறிக்கப்பட்டிருந்தது. அந்த வாசகத்தை அனுமதிக்கமுடியாது என்றார் யாழ். உதவி பொலிஸ்அத்தியட்சகர் சாந்தகுமார சந்திரசேகரா. இதைத் தொடர்ந்து சிவகுமாரனின் தலைமையில் அந்த இடத்தில் ஒரு சாத்வீகப் போராட்டம் நடந்தது. இறுதியில் சிவகுமாரனுக்கு வெற்றி கிடைத்தது.

தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாளன்று பொலிஸ் அட்டூழியத்தின் விளைவாக ஒன்பது தமிழ் மக்கள் மாண்டனர். நூற்றுக்கணக்கான மக்கள் காயமடைந்தனர்.

தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் பொலிஸ் வெறியாட்டத்திற்குப் பொறுப்பானவர் என்று கருதப்பட்ட யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சந்திரசேகராவை நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் முன்வீதியில் கொலை செய்யமுயன்றதாக சந்தேகத்தின்பேரில் சிவகுமாரனைத் தேடினார்கள்.

1974ம் ஆண்டு ஜூன் 5ம் தி.தி 'உயிர் தமிழுக்கு உடல் மண்ணுக்கு'' என்ற வகையில் சிவகுமாரன் தன்னுயிர் ஈந்தார்.

## இராசி பலன்

**புதன்கிழமை**
**05-06-1991**

அட்டமி பின்னிரவு 4-49 வரை, சதயம் பிற்பகல் 3-45 வரை, சித்தயோகம், இராகுகாலம் காலை 11-52 முதல் 1-22 வரை, சுப நேரம் மாலை 4-22 முதல் 5-52 வரை.

மேஷம்: பயணத்தின் மூலம் அனுகூலகம், நல்லோர் தொடர்பு, பொருளாதார வசதி.

இடபம்: புதிய முயற்சி, நண்பர்கள், சந்திப்பு, குடும்ப சுகம்,

மிதுனம்: தீயவர்கள் தொடர்பு, மனக்கிலேசம், அலைச்சல்.

கடகம்: உடல் நலம் பாதிப்பு, கவலைகள் அதிகரிக்கும், குடும்பப் பிரிவு.

சிங்கம்: நல்ல செய்தி, பெற்றோர் உதவி, குடும்ப மகிழ்ச்சி.

கன்னி: உற்சாகமான சூழ்நிலை, அதிர்ஷ்ட வாய்ப்பு, பண வரவு.

துலாம்: கடுமையான உழைப்பு, அசதி, சோதனைகள் பெருகும்.

விருச்சிகம்: தொழில் பாதிப்பு, பகைவர் தொல்லை, நிம்மதிக்குறைவு.

தனுசு: கலைத்துறை இன்பம், தக்கதருணத்தில் உதவி, மதிப்பு.

மகரம்: அலைச்சல், குடும்ப முரண்பாடு, தகாதசெயல்.

கும்பம்: விருந்துபசாரம், உறவினர் பெருமை, பணப்புளக்கம்.

மீனம்: அவதியுறல், தொழில் தாமதம், வழக்கு விவகாரம்.

- ஜோஸ்யர்

## ★ மூன்றும் உலக நாடுகள் ஆயுதக் கொள்முதலுக்கு 17,000 கோடி ரூபா செலவு

(வாஷிங்டன்)

மூன்றும் உலக நாடுகள், ஆயுதக் கொள்முதலுக்கு வருடாந்தம் 17,000 கோடி ரூபாவைச் செலவிட்டுவருவதால், உதவிவழங்கும் நாடுகள் தமது உதவியை இந்நாடுகளுக்கு அரைவாசியாகக் குறைக்க முடிவுசெய்திருப்பதாக உலக வங்கியின் முன்னாள் தலைவர் றெபேர்ட்மக்னமாரு, வாஷிங்டனில் நடைபெற்ற உலக வங்கி மாநாட்டில் தெரிவித்தார்.

அங்குஅவர்மேலுய்உரையாற்றுகையில்; உதவியைப் பெறும் நாடுகளில் தேசிய வருமானத்தில் 2 சதவீதத்தைப் பாதுகாப்புச் செலவினங்களுக்கும், உள்நாட்டுப் போருக்கும் செலவிட்டு வருகின்றன. இதனால் உலகவங்கிபோன்ற அமைப்புக்களின் உதவியைப்பெறும் நாடுகள் தமது உதவியைக் கூட பொருளாதார, சமூக மேம்பாடுகளுக்குச் செலவிடத் தவறிவருவதாகவும் தெரிவித்தார்.

சுருங்கச் சொன்னால் இவ்வுதவிகளை, இராணுவச் செலவினங்களுக்கே வறிய நாடுகள் செலவிட்டுவருவதாகவும் அவர் கூறினர். (ச)

## ஜெயலலிதாவுடன் போட்டியிடும் நடிகர் ராஜேந்தரை தீயிட்டு உயிருடன் கொளுத்த முயற்சி

(சென்னை)

தாயக மறுமலர்ச்சிக் கழக தலைவரும், நடிகருமான திரு. டி. ராஜேந்தரை உயிருடன் தீ மூட்ட அ. தி. மு. க. தொண்டர்கள் மேற்கொண்ட முயற்சி பொலிசாரின் தலையீட்டால் தவிர்க்கப்பட்டுள்ளது.

பர்கூர் தொகுதியில் இவர் ஜெயலலிதாவை எதிர்த்து போட்டியிடுகிறார். இதற்காக திரு. ராஜேந்தர் இத்தொகுதியில் வீடொன்றையும் எடுத்து பிரசாரத்தில் இறங்கியுள்ளார்

கடந்த வாரம் இவரது வீட்டை முற்றுகையிட்ட அ. தி. மு. க. தொண்டர்கள் ஜெயலலிதாவை எதிர்த்து இவர் போட்டியிடுவதை வன்மையாகக் கண்டித்ததுடன் வீட்டினுள்ளே இருந்த அவரையும் அவரது குடும்பத்தினரையும் பெற்றோல் ஊற்றிக் கொளுத்தும் முயற்சியை மேற்கொண்டனர்.

அவ்விடத்தில் கலாட்டா இடம்பெறுவதாக பொலிஸாருக்குக் கிடைந்த தகவலையடுத்து அவர்கள் உடனடியாக அவ்விடம் வந்து இம் முயற்சியை முறியடித்தனர். இச்சம்பவத்தில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் உட்பட நான்கு பொலிஸார் படுகாயமடைந்தனர். (சி)

## ஆந்திர பிரதேசத்தில் வேலை நிறுத்தம்

(புதுடில்லி)

ஆந்திரபிரதேசத்தில் நேற்றுமுன்தினம் முழு அளவிலான வேலைநிறுத்தம் நடைபெற்றதாகவும் இவ்வேலை நிறுத்தத்தின்போது 500 பேர் கைதுசெய்யப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

உண்ணாவிரதமிருந்து வரும் தேசிய முன்னணித் தலைவர் என். டி. ராமராவ் வலுக்கட்டாயமாக ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டதைக் கண்டித்தே இவ்வேலைநிறுத்தம் நடைபெற்றது.

இவ்வேலை நிறுத்தத்தின் போது பல வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வாழைகள் சேதம்

(அசசுவேலி)

வாழைச்செய்கை பலத்த காற்றினால் பெருமளவில் சேதமடைந்துள்ளது.

அண்மையில் வீசிய தென்மேல் பருவப்பெயர்ச்சிக் காற்றினால் நீர்வேலி, புத்தூர் பகுதிகளில் பெருமளவில்வாழைத் தோட்டங்கள்சேதமடைந்துள்ளன.

## புதிய பணிப்பாளர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபைத் தெரிவு உதவி ஆணையாளர் தலைமையில் அண்மையில்கூடியபோது திரு சூ. சிறில் புதிய தலைவராகவும், திரு. எஸ். ரி. கணநாதன் உப தலைவராகவும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேற்படி கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மற்றைய பணிப்பாளர்கள் விபரம் வருமாறு:

திருவாளர்கள் ஆ. ச. தியாகராசா, ஞானசிங்கம், வே. கிருஷ்ணனந்தன், இ. வேதநாயகம், டாக்டர் எஸ்.மோகனதாஸ். (வி)

## தேசிய வருமானம் உயர்வு

(கொழும்பு)

இலங்கையின் தேசிய வருமானம் உயர்ந்துள்ளதால் நாட்டில் பணவீக்கம் கணிசமான அளவு குறைந்திருப்பதாக மத்திய வங்கியின் அறிக்கை தெரிவித்திருக்கின்றது. பணவீக்கம் மேலும் குறையலாமென அச்சுற்றறிக்கை தெரிவித்துள்ளது. (ச)

## பெற்றோலில் கலப்படம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலைவைத்தியர்களுக்கு வழங்கப்பட்ட பெற்றோலில் அதிக அளவு மண்ணெண்ணெ கலக்கப்பட்டுள்ளது என வைத்தியர்கள் புகார் செய்துள்ளனர்.

பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து இவ் வைத்தியசாலைக்கு எடுத்துவரப்படுமுன்னரே இக்கலப்படம் செய்திருக்கின்றனர் என்று தெரிவித்தனர். (56)

## சர்வோதயத்திலிருந்து 6 தமிழர்கள் ராஜினமா

(யாழ்ப்பாணம்)

இங்கை சர்வோதயத்தின் முக்கிய பதவிகளை வகித்து வரும் தமிழர்களில் இதுவரை 6 பேர் தமது பதவிகளை ராஜினமா செய்துள்ளனர்.

''இனவாதம், ஊழல், பாகுபாடு, தமிழ் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றம், அதிகாரத் துஷ்பிரயோகம் போன்றவை சர்வோதயத்தில் தொடர்ந்து இடம்பெற்றுவருவதினாலேயே நாம் எமது பதவிகளை ராஜினமா செய்துவிட்டோம்'' என மேற்படி பதவிகளிலிருந்து விலகியோர் தெரிவித்தனர்.

இவர்கள் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்;

சர்வோதயம் தனிச்சிங்கள இனவாத பாகுபாடுகளைக் கொண்ட ஒரு குழுவாகவே இயங்கிவருகின்றது. இதன் செயல்பாடுகளையும், ஊழல்களையும் எதிர்த்து நாம் பல முறை மேலிடத்துக்கு முறையீடு செய்தும் எதுவிதபலனும் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தனர்.

சர்வோதயத்தின் செயல்பாடுகள், ஊழல்கள் பற்றி, கொழும்புப் பத்திரிகைகள் அடிக்கடி சுட்டிக்காட்டி வருவதும் குறிப்பிடத்தக்கது. (வி)

## மெய்வல்லுநர் போட்டி

(சாவகச்சேரி)

மட்டுவில் கொத்தணி இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை 6-ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மட்டுவில் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் இரா சுந்தரலிங்கம் முதன்மை விருந்தினராக இந்த வைபவத்தில் கலந்து கொள்கின்றார்.

மட்டுவில் கொத்தணி அதிபர் அ. பொ. செல்லையா இவ் வைபவத்திற்குத் தலைமை தாங்குவார்,

## பலதும் பத்தும்

### வின்ஸ்டன் சேர்ச்சில்!!

இங்கிலாந்தின் பிரதமராகப் பதவி வகித்தவர்களில் சேர். வின்ஸ்டன் சேர்ச்சில் புகழ்மிக்கவராவர். அவர் சிறந்த பேச்சாளரும் கூட. ஒரு தடவை சேர்ச்சிலுடன் அவருடைய நெருங்கிய நண்பர் ஒருவர் உரையாடிக் கொண்டிருந்தார். அப்போது அந்த நண்பர் தனது பேச்சில் 'நீங்கள் ஒவ்வொரு மேடையிலும் பேசும்போது மண்டபத்தில் கூட்டம் நிரம்பி வழிவதைப் பார்க்கும்போதெல்லாம் மக்களுக்கு உங்கள் மீது இருக்கும் அபிமானத்தை எண்ணிப் பெருமைப்படுவீர்கள் அல்லவா' என்று பெருமையோடு கேட்டார்.

உடனே சேர்ச்சில் ''இல்லை'' எனப் பதிலளித்தார். ''ஏன்?'' என்று கேட்டார் நண்பர்.

''இந்தக் கூட்டத்தைக் கண்டு ஏமாந்துவிடாதீர்கள். என்னை நடுத்தெருவில் நிறுத்தித் தூக்குமேடையில் ஏற்றுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அப்போது நான் எப்படிச் சாகிறேன் என்று வேடிக்கை பார்க்க இதைவிட அதிகமாகக் கூட்டம் கூடும்'' என்றார் சேர்ச்சில்.

— ஞானி

# மட்டுநகரில் ரெலோ-ராணுவம் இணைந்து தேடுதல் வேட்டை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல கிராமங்களில் இராணுவமும், ரெலோவினரும் இணைந்து தேடுதல் வேட்டையை நடத்திவருகிறார்கள்.

இத்தேடுதலின்போது கைது செய்யப்படுபவர்கள் பின்னர் வீடு திரும்புவதில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது

இம்மாவட்டத்திலுள்ள கோயில்போரதீவுப் பகுதியில் நேற்றுமுன்தினம் ரெலோவினரும், சிறிலங்கா இராணுவத்தினரும் நடத்திய தேடுதல் வேட்டையில் மூன்று தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கோயில் போரதீவைச் சேர்ந்த இ. வரதராசா (26 வயது), ஆ. தெய்வநாயகம் (21 வயது), பொ. சிவப்பிரகாசம் (31 வயது, வெல்லாவெளி) ஆகியோரே சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்.

இம்மாவட்டத்தில் உள்ள பெரியபோரதீவு, முனைக்காடு, கோயில் போரதீவு, கல்லடிப் பற்று ஆகிய கிராமகளைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவமும், ரெலோவினரும் 6 தமிழ் இளைஞர்களைக் கைது செய்தனர்.

நேற்று முன்தினம் காலை பெரிய போரதீவிலுள்ள இராணுவத்தினரும், ரெலோவினரும் இணைந்து பெரிய போரதீவு, முனைக்காடு ஆகிய கிராமங்களைச் சுற்றிவளைத்தனர். இச்சுற்றிவளைப்பின் போது கோயில் போரதீவைச் சேர்ந்த அழகுத்துரை முருகமூர்த்தி (21 வயது), கோ. சங்கர் (21 வயது), பா. லவன் (21 வயது) ஆகிய மூவரும் கைது செய்யப்பட்டு, இராணுவ முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

## 6,000 பொதுமக்கள் இறந்தும் காணாமலும் போயுள்ளனர்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஆறாயிரம் பொதுமக்கள் இறந்தும், காணாமலும் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மனித உரிமைகள் காப்புக்கழகம் நடத்திய ஆய்விலே இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மேற்படி கழகம் அறிவித்துள்ளது,

கடந்த பன்னிரண்டு மாதங்களிலே இவ்வாறு ஆறாயிரம் மக்கள் இறந்தும் காணாமலும் போயிருப்பதாக மேற்படி கழகம் தெரிவித்தது.

## 23 பேர் விடுதலை

[யாழ்ப்பாணம்]

பல்வேறு காரணங்களுக்காக, விடுதலைப் புலிகளால் தடுத்துவைக்கப்பட்டிருந்த 23 பேர் நேற்றுப் பிற்பகல் 3-15 மணிக்கு கோண்டாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மாவட்டச் செயலகத்தில் வைத்து விடுவிக்கப்பட்டனர்.

உதவி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு.பாப்பா, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர் திரு. தினேஷ் ஆகியோர் மேற்படி 23 பேர்களையும் அவர்களின் பெற்றோர், உறவினர்களிடம் ஒப்படைத்தனர். (வி)

## முத்தமிழ்விழா கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தின் சகல கூட்டுறவுச் சங்கங்களினதும் பொதுமுகாமையாளர்களையும் நாளை வியாழக்கிழமை பி.ப. மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் நடைபெறவுள்ள முத்தமிழ் விழாபற்றி ஆராயும் கூட்டத்திற்கு தவறாது சமுகம்தருமாறு யாழ். மாவட்ட கூட்டுறவுப் பகுதியினர் கேட்டுக் கொள்கின்றனர்.

### இளநீர்

[1ம் பக்கத் தொடர்ச்சி)

மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் இருபடையினர் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 4-40 மணியளவில் நடைபெற்றது.

### பலன்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நேற்று சென்னை போய்ச்சேர்ந்தனர்.

தமது 5 நாள் விஜயத்தின் இறுதி நாளான நேற்றும் பாதுகாப்பு செயலர் சிறில் ரணதுங்க, பொலிஸ் மா அதிபர் ஏர்ணஸ்ட் பெரேராவையும் மற்றும் உளவுத்துறை அதிகாரிகளையும் சந்தித்தனர்.

இதற்கு முன்னர் இக்குழுவினர் பிரதமர் திரு. டி. பி. விஜயதுங்காவையும் சந்தித்தனர். (பூ)

### கோபால்சாமி

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மாகபாக்கு நீரிணையூடாக யாழ்ப்பாணம் சென்று அங்கிருந்து இவர் வவுனியா சென்றதாகவும் அவர் கூறினார்!

திரு. கோபாலசாமி தம்முடன் திரு. கருணாநிதியின் செய்தியொன்றையும் திரு பிரபாகரனுக்கு எடுத்துச்சென்றிருந்தார் இது பற்றியும் விசாரிக்கவேண்டுமென்றும் வாழப்பாடி ராமமூர்த்தி கேட்டுள்ளார். (சி)

### நயினை

[1ம் பக்கத் தொடர்ச்சி)

யினரால்தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்த உற்சவத்தில் நயினாதீவில் வசிக்கும் மக்கள் மட்டுமே கலந்து கொள்ள முடியும் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இவ் ஆலயத்தில் அறங்காவலர் சபைக்கு இந்த தடை உத்தரவு தொடர்பாக கடற்படையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (75)

### மிதிவெடியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மிதிவெடியில் அகப்பட்டு இடது கால் துண்டிக்கப்பட்ட நிலையில் கந்தையா சர்வானந்தா [42 வயது) என்பவரும் மண்டைதீவு பண்ணைப் பாலத்திற் கண்மையில் நடந்து சென்று கொண்டிருக்கையில் புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த சரவணமுத்து அமலன் ஈசன் (20 வயது) என்ற இளைஞன் படுகாயங்களுக்குள்ளாகியுப யாழ். போதனாவைத்தியசாலையில்சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். [56)

### ராமராவ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டாயமாக உடைக்கப்பட்டாலும்கூட தமது கோரிக்கைகளுக்கான போராட்டம் தொடரும் என்று கூறினார். (பூ]

## மாலைதீவில் புயல்காற்று 1200 தீவுகள் பாதிப்பு

(மாலே)

மாலைதீவில் நேற்று வீசிய புயற்காற்றினால் பலத்தசேதம் மேற்பட்டுள்ளது. ஆயிரத்து இருநூறு சிறு தீவுகள் பாதிப்புக்குள்ளானகின.

3 ஆயிரம் வீடுகள் முற்றுகச் சேதமாகின. 21 ஆயிரம் பேர் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். 52 சிறு சிறு இறங்கு துறைகள் சேதமடைந்துள்ளன.

90 மைல் வேகத்தில் வீசிய புயல் காற்றினாலும், மழையினாலும் மரங்கள் வேரோடு சரிந்து பலசேதங்களை ஏற்படுத்தியுமுள்ளன. (பூ)

### கலைஞர்

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

கொண்ட நவீன முறையான வான் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

### தமிழர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தினம் ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டு இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நேற்று இப்பகுதியில் இருபகுதியினருக்குமிடையே பலத்தமோதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வவுனியாவில் பெருந்தொகையான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு, இராணுவ நடவடிக்கையைத் தொடர்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### ஆனையிறவில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இம்மோதலின் போது புலிகள் தரப்பில் வீரவேங்கை கரன் (வா. யூட் கௌசிகரன்-திருமலை] என்ற போராளி வீரமரணமடைந்தார்.

இவருக்கு புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

## ஜெய்ப்பூர் நிறுவனத்திற்கு யூ.எஸ்.எய்ட் அமைப்பு உதவி

[கொழும்பு]

யூ. எஸ். எய்ட் நிறுவனம் 'ஜெய்பூர்' செயற்கை உறுப்புகளை தயாரிக்கும் நிறுவனமான ஆபத்து'க்குஉதவும்நட்புறவுச் சங்கத்திற்கு ஒரு கோடியே 70லட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது.

இந்நிறுவனம் இதுவரையும் 2500 பேருக்குச் செயற்கை உறுப்புக்களை வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

தற்போது வழங்கப்பட்ட நிதியுதவியைகொண்டு மேலும் 10,000 பேருக்குச் செயற்கை உறுப்புக்களை வழங்கமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது,

யாழ்ப்பாணம் உட்பட நாட்டில் 4 நிலையங்களில் செயற்கை உறுப்புகள் வழங்கும் நிறுவனம இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. [பூ]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63.ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூன் மாதம் 5ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது
Registered as a News Paper at the General Post offic Sri Lanka under licence Number B/109306/81.

## வெடிமருந்து கிடங்கு வெடித்து நூறு பேர் மரணம்

[அடிஸ்அபாபா]

எதியோப்பியரவின் தலைநகர் அடிஸ் அபாபாவில் வெடிமருந்துக்கிடங்கு வெடித்ததில் 100பேர் கொலையுண்டனர்.

தீச்சுவாலை அணையாது தொடர்ந்து எரிந்துகொண்டிருப்பதாக அறியவருகிறது.

இந்த வெடி மருந்துக் கிடங்கைச் சூழ இருந்த பல வீடுகள் தரைமட்டமாகியுள்ளன. இந்த வெடிமருந்துக் கிடங்கு வெடிப்பு, நாச வேலையெனப் புரட்சிக் குழு அரசு குற்றஞ் சாட்டியுள்ளது. (பூ)

## பொன்னாலை நோக்கி சூடு ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலைச் சந்தியில் கூடி நின்ற பொதுமக்கள் மீது வலந்தலைச் சந்தியில் நிலை கொண்டிருக்கும் படையினர் சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகத்தினை நேற்று மேற்கொண்டதில் இளைஞர் ஒருவர் படுகாயங்களுக்கு உள்ளானார்.

கந்தையா விக்னேஸ்வரன் [17 வயது பளை] என்பவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவ்விடத்தில் நின்ற ஏனையோர் வீழ்ந்து படுத்ததினால் காயங்களின்றி தப்பித்துக் கொண்டனர். (56)

### மன்னாரில்

(1ம் பக்கத் தொட ச்சி)

போன்ற இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பெருந்தொகையான மக்கள் இடம்பெயர்ந்து வருகிறார்கள்.

இராணுவத் தாக்குதல் எந்நேரமும் நடைபெறலாம் என்பதனாலேயே இவர்கள் இவ்வாறு இடம்பெயர்ந்து வருகிறார்கள்.

வாழைகுடி, கண்ணாட்டி, வட்டக்கண்டல், அடம்பன் தாழ்வு, பாசிமோட்டை, காத்தான்குளம், ஆண்டான் குளம், பள்ளிவாசல்திட்டி போன்ற இடங்களிலுள்ள மக்கள் மடுப்பகுதிக்கும், கட்டைக்காடு, இழந்தமோட்டை. உயிர்ந்தராசன் குளம் ஆகிய இடங்களிலுள்ள மக்கள் பரப்பான் கண்டல், காத்தான் குளம் ஆகிய இடங்களிலுள்ள தேவாலயங்களிலும் தஞ்சம் அடைந்துள்ளனர்.

## எரிமலை வெடிப்பு: 30 பேர் பலி

(டோக்கியோ)

ஜப்பானின் மேற்குப் பகுதியில் ஏற்பட்ட எரிமலை வெடிப்பின்போது 30 பேர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களில் அநேகமானோர் செய்தியாளர்களும், விஞ்ஞானிகளுமாவர்.

கடந்த 5 ஆண்டுகளில் நடந்துள்ள மிக மோசமான எரிமலை வெடிப்பு இதுவென வர்ணிக்கப்படுகிறது. (பூ)

## சைக்கிள் இலக்கத் தகடு

(பண்டத்தரிப்பு)

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலத்தினால் இவ்வருடத்திற்கான துவிச்சக்கரவண்டி இலக்கதகடு அனுமதிப்பத்திரம் தற்போது வழங்கப்பட்டுவருகின்றது. (72)

## அகதிகள் நிலை பற்றி மாத்தயா கலந்துரையாடல்

(சாவகச்சேரி]

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித்தலைவர் திரு.கோ. மகேந்திரராசா (மாத்தயா) தென்மராட்சி அகதிகள் நிவாரணக் கழகத்தினருடன் கலந்துரையாடல் ஒன்றை கடந்த 3-ம் திகதி சாவகச்சேரியில் மேற்கொண்டார்.

கலந்துரையாடலில் முகாம்களில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு, சுயதொழில் வேலை வாய்ப்பு பெற்றுக்கொடுத்தல் வலியுறுத்தப்பட்டது.

முகாமில் உள்ள விரும்பும் அகதிகளை வன்னி மாவட்டத்தில் குடியமர்த்தி விவசாயம் போன்ற சுயதொழில் வேலை வாய்ப்புக் கொடுக்க விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி முன்வந்துள்ளது. நிவாரணக்கழகம் தொடர்ந்தும் சிறுவர்களுக்கு சத்துணவும், கல்வியும் வழங்கவேண்டும் என திரு மகேந்திரராசா கேட்டுக்கொண்டார்.

## ஜாக்பொட் இயந்திரங்களை அழிக்க முடிவு!

[கொழும்பு]

பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட சகல ஜாக்பொட் இயந்திரங்களையும் அழித்துவிடுவதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சுமார் 5 ஆயிரம் 'ஜாக்பொட்' இயந்திரங்கள் பொலிசாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன

கைப்பற்றப்பட்ட சகல இயந்திரங்களின் பெறுமதியையும்சுங்கப்பகுதியினர் மதிப்பீடு செய்துவருகின்றனர். [பூ]

### பெண் புலிகள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி

இத்தகவலைத் தமிழகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும் தமிழகச் சிறையில் தற்போது 1,200 தமிழ்ப் போராளிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

தேவையேற்படின் இவர்கள் மீதும் விசாரணை நடைபெறுமென்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (சி)

## சாவகச்சேரி விழாக்கோலம்

(நாவற்குழி)

முத்தமிழ் விழாவை முன்னிட்டு சாவகச்சேரி பகுதியில் சிகரங்கள், அலங்கார வளைவுகள் கட்டப்பட்டும், சுலோகங்கள் எழுதப்பட்ட பனர்கள் தெருவெங்கும் கட்டப்பட்டும் சாவகச்சேரி நகரமே விழாக் கோலம் பூண்டுள்ளது.